**கந்தகெடிய பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

---------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 பெப்ரவரி 18 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூன் 17 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 மே 05 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, கந்தகெடிய பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 246,017 ஆக காணப்பட்ட போதிலும், அவை ரூபா 429,235 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருமான கடன்பட்டோரின் மீதி மற்றும் திரண்ட நிதியக் கணக்கு மீதி ரூபா 183,218 வீதம் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) நீதி மன்றத் தண்டப்பண வருமானத்தில் அடங்கியுள்ள மாகாண சபையினால் தடுத்து வைக்கப்படும் முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 11,547 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்கான ரூபா 36,393 இற்கான நிருவாகச் செலவுகளை நீதிமன்றத் தண்டப்பண வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 36,393 இனால் மிகையாகவும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருமானக் கடன்பட்டோர் மீதி மற்றும் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 47,940 வீதம் மிகையாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது மகநெகும கிராமியப் பாதைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2014 இன் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 05 நிர்மாண வேலைகள் மற்றும் விஷேட கிராமிய சுற்றுலா துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2014 இன் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த நிர்மாண வேலை ஒன்று தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய தொகை ரூபா 3,191,674 தொகை எனினும்

ரூபா 3,246,377 தொகைக்காக கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்தமையால் ஆண்டிற்கான மிகை மற்றும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 54,703 வீதம் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பதுளை மஹியங்கனை பாதையில் 21 ஆம் சந்தியின் அன்மையில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் 2015 மார்ச் வரை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத பஸ் தரிப்பு நிலையத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ஆகிய ரூபா 177,604 தொகைக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மிகை ரூபா 177,604 இனால் குறைவாகவும் மற்றும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோரின் பெறுமதி அதே தொகையால் மிகையாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 13,987,490 ஆகக் காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 13,927,855 ஆகும்.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு,

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1958 இன் 15 இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் | 2008 ஆண்டு முதல் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்ட ரூபா 420,434 இற்கான ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு தொகை குறிப்பிட்டுள்ளவாறு அந் நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 756 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட சுற்று நிருபம் | சபைக்குச் சொந்தமான கந்தகெடிய சந்தியில் காணப்படும் 05 கடைகள் மற்றும் சந்தை வளவில் காணப்படும் 03 கடைகள் என்பவற்றின் மாதாந்த வாடகை 05 வருடத்திற்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,103,181 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 888,941 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 2.992,122 இற்கான அனுகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம். நீர்க் கட்டணம் மற்றும் கடை வாடகை தொடர்பாக 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவைகளை அறவீடு செய்யும் முன்னேற்றம் நூற்றிற்கு 10 இனை விட குறைவாக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில் போடப்பட்ட கடைவாடகை வருமானத்தில் அறவீடு செய்யும் முன்னேற்றம் நூற்றிற்கு 13 இனை விட குறைந்த பெறுமதியே காணப்பட்டது.

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பின்வருமாறு,

| | ரூபா. |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 1,598,017 |
| முத்திரை கட்டணம் | 843,205 |
| | -------------- |
| | 2,441,222 |
| | ======= |

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------------

1971 இன் 08 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிக்கு மூன்று சந்தர்ப்பங்களில் ரூபா 33,184 தொகை ஒன்று மிகைவிதிப்பு ஆக செலுத்தப்பட்டிருந்தது

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-----------------------------------------------------

(அ) UPGY – 0873 கொண்ட கை டிரக்டரை பயன்படுத்தாமல் சபை வளவில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் டிலேரர் வண்டி துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

(ஆ) அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் இருந்து 2007 ஆண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த மின் பிறப்பாக்கி 2011 ஆண்டு இறுதி வரை செயற்படாது காணப்பட்டதுடன், அதனை திருத்தம் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் சபை வளவில் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டுள்ளது.

3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

--------------------------------------------------------------------

சபையினால் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சேகரிக்கப்படும் குப்கைகள் மகாவெலி அதிகார சபைக்கு சொந்தமான ரஜ மாவத்தை புத்தங்கோட்டையில் அமைந்துள்ள காணி ஒன்றில் முறைசாரா விதமாக குவிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு